# கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை

## சட்ட பீடம்

## மனித உரிமைகளுக்கான கற்கை நிலையம்

## மனித உரிமைகளிலும் சமாதானக் கற்கைகளிலுமான தொலைதூரக் கற்கை நெறி –2007/08

## மனித உரிமைகள் (பத்திரம் I)

(இரண்டு மணித்தியாலம்)

வினாக்களின் மொத்த எண்ணிக்கை: 06

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

(தெளிவற்ற கையெழுத்துக்குப் புள்ளிகள் குறைக்கப்படும்)

1. "மனித உரிமைகள்" என்பதன் மூலம் நீர் விளங்கிக்கொள்வது யாது என்பதை விளக்குக.

   மேற்படி வினாவுக்கான உமது விடைக்கு ஆதரவாக நீர் ஆதாரங்காட்ட விரும்பும் அரசியல் - சட்டக் கோட்பாட்டினை ஆராய்க.

2. ஏனைய எல்லா வடிவங்களிலுமான அரசாங்கத்தைவிட ஜனநாயகமே மிகச் சிறந்தது என நீர் கருதுகின்றீரா? ஜனநாயகத்தின் அத்தியாவசியச் சிறப்பியல்புகளை அழுத்தியுரைத்து உமது விடையினை விபரிக்க.

3. "உரிமைகள் பட்டயம்" என்பதன் மூலம் நீர் விளங்கிக் கொள்வது யாது? அவற்றின் பிரதான மூலகங்களை, பல நாடுகளின் அரசியல் வரலாற்றை மாற்றியமைத்ததான அத்தகைய ஆகக் குறைந்தது மூன்று ஆவணங்களையாவது ஆதாரங்காட்டி விவரிக்க.

4. கடந்த ஒரு தசாப்தத்துக்கு முன்னதாக தனது குடியேற்றவாத ஆட்சியாளரிடமிருந்து சுதந்திரம் பெற்றதான இலங்கானா என்ற வளர்முக நாடானது மோசமான உள்நாட்டு யுத்தம் ஒன்றை எதிர்கொண்டுள்ளது. உள்நாட்டு யுத்தத்தின்போது தனது பிரஜைகளை சர்வதேச சமூகத்துக்கு ஏற்புடைத்தான விதத்தில் அது நடாத்தத் தவறியுள்ளதென சர்வதேச நிறுவனமொன்றினால் அது குற்றஞ்சாட்டப்படுகின்றது. அதன் வெளியுறவு அமைச்சரின் சட்ட ஆலோசகராக நீர் நியமிக்கப்படுவதாகக் கருதிக் கொள்ளவும். பிரஜைகளை நடாத்தும் விடயம் என்பது இறைமைமிக்க ஒரு நாட்டின் ஓர் உள்விவகாரமாகும் என்பதுடன் அது பற்றி முறையிடுவதற்கு சர்வதேச சமூகத்துக்கு எதுவுமே இல்லை என்பதை வலியுறுத்தும்

Scanned with CamScanner

5. "சமமானவர்கள் மத்தியில் சமமாக இருத்தலே சமத்துவம் என்பதனை கருதுகின்றது" நீர் உடன்படுகின்றீரா? காரணங்களைத் தருக.

6. மனித உரிமைகள் தொடர்பான பிரதான பிராந்திய பொறிமுறைகள் மூன்றினைப் பற்றி விளக்குக. மேலுள்ள ஆராய்வின் அடிப்படையில், ஆசியாவுக்கான மனித உரிமைகள் பொறிமுறைகளுக்கான உத்தேச மாதிரியொன்றினைச் செய்க.

*****

Scanned with CamScanner

கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை.

சட்ட பீடம்

மனித உரிமைகள் மற்றும் சமாதானக் கற்கைகளிலான
தொலைக் கல்வி டிப்ளோமா - 2005/06

## மனித உரிமைகள் (பத்திரம் I) (Human Rights)

(இரண்டு மணித்தியாலம்)

வினாக்களின் மொத்த எண்ணிக்கை 06

மூன்று வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

(தெளிவற்ற கையெழுத்துக்குப் புள்ளிகள் குறைக்கப்படும்)

1. தனி நபர்களது சட்ட உரிமைகள் என்ற தமது அந்தஸ்தினை மனித உரிமைகளானவை எத்தகைய பரிணாம வளர்ச்சிப்படியினூடாகப் பெற்றுக் கொண்டன என்பதை ஆராய்க.

2. ஜனநாயகத்துக்கும் மனித உரிமைகளுக்கும் இடையிலான உறவுமுறையின் மீது கருத்துரைக்க. உமது விடையினை நடைமுறை உதாரணங்களால் ஆதாரப்படுத்துக.

3. அடிப்படை உரிமைகளுக்கும் மனித உரிமைகளுக்கும் இடையில் ஏதேனும் வேறுபாடு உள்ளதா? உமது விடைக்கான காரணங்களைத் தருக.

4. மனித உரிமைகளை வலுவூட்டி மேம்படுத்துவதிலும் பாதுகாப்பதிலும் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் வகிக்கும் பங்கினை விளக்குக. அத்தகைய வலுவூட்டி மேம்படுத்தலுக்கும் பாதுகாத்தலுக்குமென ஐ. நா. கைக்கொள்ளும் இரண்டு பொறிமுறைகளை விவரிக்குக.

5. உமது கருத்தில், சர்வதேச தராதரங்களுக்கு அமைவாக, மனித உரிமைகளை வலுவூட்டி மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்குமான போதியளவு சட்டக் கடப்பாடுகளை, இலங்கை பொறுப்பேற்றுள்ளதா? அத்தகைய கடப்பாடுகளின் கீழ் அரசின் செயலாற்றுகை தொடர்பில் நீர் திருப்திப்படுகின்றீரா?

6. நபர் ஒருவர், பொது அதிகாரிகளினால் புரியப்படும் தனது மனித உரிமைகளின் மீறல்களுக்கான நிவாரணங்களை இலங்கையில் எத்தகைய மன்றங்களிலிருந்து நாடிப் பெற முடியும்? உமது கருத்தில், கிடைக்கக்கூடியதான அந்த நிவாரணங்கள் பயன்வலுக் கொண்டவையாகுமா? இல்லையெனில் ஏன்?

*********

Scanned with CamScanner

கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை

சட்ட பீடம்

மனித உரிமைகளுக்கான கற்கை நிலையம்

மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகக் கற்கைகளுக்கான தொலைக்கல்வி டிப்ளோமா – 2013/2014

## மனித உரிமைகள் (வினாப்பத்திரம் I)

(நேரம்: இரண்டு மணித்தியாலம்)

மொத்த வினாக்களின் எண்ணிக்கை: 06

மூன்று (03) வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்குக.

(தெளிவற்ற கையெழுத்திற்குப் புள்ளிகள் குறைக்கப்படும்)

1. (அ) சர்வதேச மனித உரிமைகளின் பொறிமுறைகள் தொடர்பான பகுத்தாராய்வொன்றைச் செய்க.

   (ஆ) மேற்கூறிய பொறிமுறைகளின் பணிகளை அடிப்படையாகக் கொண்டு, இலங்கையில் அடிப்படை உரிமைகளை மேம்படுத்துடன் தொடர்புபட்ட நடடிபடிமுறைகளினது முன்னேற்றத்துக்கு எத்தகைய சிபாரிசுகளை நீர் செய்வீர்?

2. "மனித கௌரவம் தொடர்பான வரலாற்று, தத்துவவியல் மற்றும் சமயக் கருத்தேற்புக்களானவை மனித உரிமைகளை மேம்படுத்துவதில் முக்கியத்துவமிக்கதொரு அத்திவாரத்தை இட்டுள்ளது."ஆராய்க.

3. 1978ஆம் ஆண்டின் அரசியலமைப்பு உறுப்புரை 17 மற்றும் உறுப்புரை 126 என்பவற்றின் கீழ் அடிப்படை மனித உரிமைகளின் மீறல் வழக்கொன்றினைத் தாக்கல் செய்வதற்கான அடிப்படைத் தேவைப்பாடுகளை விளக்கமாக ஆராய்க.

4. சர்வதேச மனித உரிமைகள் சட்டம் மற்றும் உள்நாட்டு அடிப்படை உரிமைகள் தொடர்பில் வரலாற்றுத் திருப்புமுனையான இரண்டு தீர்க்கப்பட்ட வழக்குகளை ஒப்பிட்டு வேறுபடுத்துக.

Scanned with CamScanner

நடமாடுவதற்கென, வாகனங்களைக் கொடுத்துதவ சர்வதேச முகவர் நிறுவனங்கள் பல முன்வந்தபோதிலும் அரசாங்கம் அதனை அங்கீகரித்திருக்கவில்லை. அதன் விளைவாக, நாட்டிலிருந்த மிகப் பெரிய சர்வதேச அரசாங்க சார்பற்ற நிறுவனமொன்று தனது அலுவலகத்தை மூடிவிட்டு வெளியேறுகின்றது.

மேலே விவரிக்கப்பட்ட நிலைமையில் சம்பந்தப்படும் 'உரிமைகள் பிரச்சனைகள்' மீது கருத்துரைத்து சிம்கானாவின் வெளிவிவகார அமைச்சருக்கு அறிக்கை ஒன்றினை தயாரிக்கவும். உமது கருத்துரைகளுக்கான காரணங்களைத் தருக.

5. "மனித உரிமைகளும் அரசின் இறைமையும் ஒன்றோடொன்று இசைவுறாத கருத்தேற்புக்கள் அல்லவென்றாலும், அரசொன்றின் அதிகாரங்களை மட்டுப்படுத்துதல் என்பது அந்த அரசின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதாக அமையும் என்றே பலரும் நம்புகின்றனர்."

நீர் உடன்படுகின்றீரா? உமது விடைக்கான காரணங்களைத் தருக.

6. பின்வருவனவற்றுள் எவையேனும் <u>மூன்றினைப்</u> பற்றிக் குறிப்பெழுதுக:

(அ) மனித உரிமைகள் பேரவை (Human Rights Council);

(ஆ) Eichmann வழக்கு விசாரணை, 1961;

(இ) சர்வதேச குற்றவியல் நீதிமன்றின் சுதந்திரமான வழக்குத்தொடுனர்;

(ஈ) மனித உரிமைகள் சாதனங்களில் உள்ள 'இடைநிறுத்தப்பட முடியாத" வாசகங்கள் ;

(உ) மனித உரிமைகள் பொருத்தனைகளின் இயல்பு.

********



Scanned with CamScanner

கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை

சட்ட பீடம்

மனித உரிமைகளுக்கான கற்கை நிலையம்

மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகக் கற்கைகளுக்கான தொலைக்கல்வி டிப்ளோமா – 2013/2014

# ஜனநாயகம் (வினாப்பத்திரம் II)

(நேரம்: இரண்டு மணித்தியாலம்)

மொத்த வினாக்களின் எண்ணிக்கை: 06

மூன்று (03) வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்குக.

(தெளிவற்ற கையெழுத்திற்குப் புள்ளிகள் குறைக்கப்படும்)

1. ஜனநாயகத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை (Principles) விளக்குக.
2. 'ஜனநாயகம் என்பது மக்களால் ஆளப்படுவதாகும்.' இக்கூற்றுடன் நீர் உடன்படுகின்றீரா? உமது விடைக்கான காரணங்களைத் தருக.
3. நாட்டில் ஜனநாயகத்தினை முன்னேற்றுவதன் பின்னணியில் பின்வருவனவற்றை விளக்குக.

   (அ) சட்ட ஆட்சி

   (ஆ) அதிகாரப் பரவலாக்கம்
4. இலங்கையில் ஜனநாயகத்திற்கான அச்சுறுத்தல்களை உதாரணங்களோடு ஆராய்க.
5. மனித உரிமைகளுக்கும் ஜனநாயகத்திற்கும் இடையேயான தொடர்பினை உதாரணங்களோடு விளக்குக.
6. இலங்கையில் ஜனநாயகத்தை முன்னேற்றுவதற்கான ஆலோசனைகளைத் தருக.

*****

Scanned with CamScanner

# கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை

## மனித உரிமைகளுக்கும் ஜனநாயக கற்கைகளுக்குமான தொலைதூர டிப்ளோமா கற்கைநெறி 2016/2017

## ஜனநாயகம் ( பத்திரம் II)

(நேரம் : மூன்று மணித்தியாலங்கள்)

மொத்த வினாக்களின் எண்ணிக்கை: 06

திகதி: 23 யூன் 2018 நேரம்: 1.00 p.m. - 3.00 p.m.

<u>மூன்று வினாக்களுக்கு மட்டும்</u> விடையளிக்கவும்

(தெளிவற்ற கையெழுத்திற்கு புள்ளிகள் குறைக்கப்படும்)

1. ஜனநாயகம் என்பதற்கான பொதுவான வரைவிலக்கணமானது 'மக்களின் அரசாங்கம், மக்களினாளான மக்களுக்கானது'. எவ்வாறாயினும், பல்லின நாடொன்றில் பெரும்பாண்மை மக்களினாலாக்கப்பட்ட அரசாங்கமானது சிறுபாண்மை மக்களுக்கு அச்சுறுத்தலாகும்

   மேற்போந்த கருத்தேற்புடன் நீர் உடன்படுகின்றீரா? உமது விடை நடைமுறை உதாரணங்களினால் ஆதாரப்படுத்தப்பட வேண்டும்.

2. ஜனநாயகமானது எவ்வாறு முடி ஆட்சி, பிரபுத்துவ ஆட்சி மற்றும் சர்வாதிகாரம் ஆகியனவற்றிலிருந்து வேறுப்படுகின்றது? உமது விடையினை ஜனநாயகத்தின் நன்மைகள் மற்றும் பலவீனங்களுடன் தொடர்புறுத்தி விளக்குக.

3. மனித உரிமைகள் ஜனநாயகத்தின் வெறும் கூறொன்றிற்கும் மேலானதாகும். அவை ஜனநாயக முறைமையின் சிறந்த செயல்திறனிற்கான இன்றியமையாத தேவைப்பாட்டினை பிரதிபலிக்கின்றது. மேற்போந்த கூற்றின் மீது ஜனநாயக நாடொன்றில் வெவ்வேறான மனித உரிமைகளை பாதுகாத்தல் மற்றும் உணர்த்துதல் கீழ் கருத்துரைக.

4. தேர்தல்கள் ஜனநாயகத்தின் மிகப் பிரதானமான தூண்களில் ஒன்றாகும். சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தல்கள் ஜனநாயகத்தினை எவ்வாறு விருத்தி செய்கின்றன என்பதனை ஆராய்க.

5. சட்டவாட்சி கருத்தேற்பானது அரசியலினை சட்டம் மற்றும் உரிமைகளுடன் இணைக்கின்றது, நீதிமன்றத்தின் கட்டுப்படுத்தும் அதிகாரதத்தனை வெளிப்படுத்துவதும் மக்களின் சுதந்திரத்தினை உறுதிப்படுத்துவதுமான ஏதேனும் வெளிப்பாடொன்றினை முன்வைக்கவும்.




Scanned with CamScanner

மேற்போந்த கூற்றின் மீது விசேடமாக 1978 ஆம் ஆண்டின் அரசியலமைப்புடன் தொடர்புறுத்தி கருத்துரைக.

6. சுதந்திர நாடொன்றில் மக்கள் பங்கேற்பினை ஆட்சியிலும் ஜனநாயக விழுமியங்களிலும் அதிகரிப்பதற்கு சிவில் சமூகமொன்றில் உள்ளதான வழிகள் மற்றும் வழிமுறைகள் யாவை?



Scanned with CamScanner

5

# கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை

## சட்ட பீடம்

## மனித உரிமைகள் கற்கை நிலையம்

### மனித உரிமைகளிலும் சமாதானக் கற்கைகளிலுமான தொலைதூர டிப்ளோமா கற்கைநெறி- 2009 / 2010

பத்திரம் I

(இரண்டு மணித்தியாலம்)

வினாக்களின் மொத்த எண்ணிக்கை:06

**மூன்று** வினாக்களுக்கு **மட்டும்** விடை தருக.

(தெளிவற்ற கையெழுத்துக்குப் புள்ளிகள் குறைக்கப்படும்)

1. மனித உரிமைகள் யாவும் சட்ட உரிமைகளே என்பதை விளக்குக. அனைத்துலக உரிமைகள் என்ற கருத்தேற்புடன் இசைவுறுகின்றதான உமது மதஞ்சார்ந்த அல்லது வேறேதேனும் நம்பிக்கைகள் சிலவற்றை அடையாளங் காண்க.

2. மனித உரிமைகளுக்கும் ஜனநாயகத்துக்கும் இடையிலான தொடர்பென்ன? அரசுகள் தமது பிரசைகள் தொடர்பில் அளவிறந்த தத்துவத்தைக் கொண்டிருக்கவில்லை எனக் கருதப்படுவது ஏன்? உமது விடையினை ஜனநாயகத்தின் அத்தியாவசிய சிறப்பம்சங்களைச் சுட்டிக்காட்டி விளக்கியுரைக்க.

3. "உரிமைகள் பட்டயம்" ஒன்று எந்தவொரு ஜனநாயக நாட்டுக்கும் அவசியமானது எனக் கருதப்படுவது ஏன்? தனது நாட்டின் உரிமைகள் பட்டயத்தினைப் பொருள்கோடல் செய்கையில் உதவுவதற்கென சர்வதேச மனித உரிமைகள் சாதனங்களை உதவிக்கழைத்தல் நீதி மன்றமொன்றுக்கு முறையானதாகுமா? உமது விடைக்கான காரணங் களைத் தருக.

4. 'சிம்கானா' என்பது கடந்த ஒரு தசாப்தத்துக்கு முன்புதான் தனது குடியேற்ற ஆட்சியாளர்களிடமிருந்து சுதந்திரம் பெற்ற சிறியதொரு வளர்முக நாடாகும். அண்மைய சுனாமி அனர்த்தம் காரணமாக அது மோசமான உணவுப் பஞ்சத்தை அனுபவிக்கின்றது. நிலைமையைக் கட்டுப்படுத்தும் நோக்கில் சிம்கானா அரசாங்கமானது சட்டவாக்க மொன்றை நிறைவேற்றுவதுடன் அதன் கீழ், மக்கள் தங்கள் இடங்களிலிருந்து நீங்கி நகரத்தை நோக்கி இடம்பெயர்வதும் தடுக்கப்படுகின்றது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு, அவர்கள் சுதந்திரமாக



Scanned with CamScanner

விதத்தில் அறிக்கையொன்றினை நீ தயாரிக்க வேண்டுமென்று அவர் விரும்புகின்றார்.

சர்வதேசச் சட்ட ஆவணங்களிலிருந்து அதிகார ஆதாரங்களைக்காட்டி அந்த அறிக்கையினைத் தயாரிக்குக.

5. மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்குமென கிடைப்பதாக உள்ள சர்வதேச பொறிமுறைக் கட்டமைப்பின் மீதும் மேற்குறிப்பிட்ட நோக்கத்துக்கெனப் பயனுறு கருவியாக அது செயற்படும் விதத்தின் போதுமான அல்லது மறுவளமான தன்மை மீதும் கருத்துரைக்க.

6. பின்வருவனவற்றுள் எவையேனும் **மூன்றினைப்** பற்றிக் குறிப்பெழுதுக:

(அ) குழு உரிமைகள்.

(ஆ) சமூக நல அரசென்ற கருத்தமைவு.

(இ) மக்னா காட்டா (Magna Carta).

(ஈ) கலாசார உறவுவாதம் (cultural relativism).

*******